ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1813/15 - 2013 ජුනි මස 05 වැනි බදාදා - 2013.06.05
*1813/15 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆவது உறுப்புரையின் (2) துணை உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் துணைப் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2013, யூன் 05.

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் ஏற்றுமதி (தரம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் என்றழைக்கப்படும்.

2. 2013.04.29 ஆந் திகதிய 1808/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், அந்த அறிவித்தல் மீண்டும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும்.

3. மேற்படி அட்டவணயில் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் அந்த அட்டவணையின் II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த இலங்கை தரத்திற்கு உட்பட்டதாக காணப்படாத பட்சத்தில் எந்தவொரு நபரும் அப்பொருளை ஏற்றுமதி செய்யக் கூடாது.

4. சகல ஏற்றுமதியாளர்களும், அவர் ஏற்றுமதி செய்கின்ற ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும் உறுதியாக பொருட்களை பரீட்சிப்பதற்கு அல்லது இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடம் ஒன்றினால் வழங்கப்பட்ட அப்பொருட்களுக்கு குறிக்கப்பட்ட இலங்கை தரக் கட்டுப்பாட்டுடனான தன்மை பற்றிய சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு ஏற்றுமதியாளரினாலும், அவரால் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும், அப்பொருட்களை பரீட்சிப்பதற்காக அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடம் ஒன்றிலே பெற்றுக் கொண்ட ஒத்திசைவுச் சான்றிதழை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற விடுவித்தல் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

6. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு பொருளை ஏற்றுமதி செய்யும் அனைத்து ஏற்றுமதியாளர்களினாலும், பூர்த்தி செய்யப்படுகின்றவாறு அளவிடப்படுகின்ற ஒவ்வொரு தொகையில் இருந்தும் பொருட்கள் மற்றும் மாதிரிகளுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடனும் இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படுகின்ற விடுவித்தல் சான்றிதழை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு (சுங்க விடுவித்தலுக்கு முன்னர்) சமர்ப்பித்தல் வேண்டும்.


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7. இக்கட்டளையின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற பொருளொன்றினை (பொருட்கள்) தயாரித்தல் இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு நடைமுறை மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப மதிப்பீடு செய்தல் வேண்டும்.

8. இக்கட்டளையின் கீழ் உள்ளடக்கப்பட்ட பொருட்களை, இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அதற்காக விடுவித்தல் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தவிர, எந்தவொரு ஏற்றுமதியாளரும் ஏற்றுமதி செய்யக் கூடாது.

9. இந்த ஒழுங்குவிதிகள் 2014, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

**அட்டவணை**

| HS வகைப்படுத்தல் குறியீடு | தொடர் இலக்கம் | நிரல் I<br>பொருட்கள் | நிரல் II<br>இலங்கை தரக்கட்டுப்பாடு |
|---|---|---|---|
| | 01 | நசுக்கவோ அல்லது அரைக்கவோபடாத கறுவா | இலங்கை தரக்கட்டுப்பாட்டு 81 2010 கறுவா மற்றும் செலவினம் |
| 0906.11.10 | | கரியச் சேர்வைகளுடைய | |
| 0906.11.11 | | 1 கி. கிராம் அல்லது குறைந்த அளவுகளில் சில்லறை பொதி யிடப்பட்டவை மற்றும் பொதி யிடப்பட்டவை | |
| 0906.11.12 | | பிற கறுவாப்பட்டைச் சுருள்கள் | |
| 0906.11.13 | | கறுவாப்பட்டைச் சுருள்கள் | |
| 0906.11.14 | | கறுவாப்பட்டை இறகுகள் | |
| 0906.11.15 | | கறுவாப்பட்டைத் துண்டுகள் | |
| 0906.11.91 | | 1 கி. கிராம் அல்லது குறைந்த அளவுகளில் சில்லறை பொதி யிடப்பட்டவை மற்றும் பொதி யிடப்பட்டவை | |
| 0906.11.92 | | பிற கறுவாப்பட்டைச் சுருள்கள் | |
| 0906.11.93 | | கறுவாப்பட்டைச் சுற்றுக்கள் | |
| 0906.11.94 | | கறுவாப்பட்டை இறகுகள் | |
| 0906.11.95 | | கறுவாப்பட்டைத் துண்டுகள் | |
| 0906.20.10 | | கறுவா நசுக்கப்பட்டவை | |
| 0906.20.20 | | கறுவா அரைக்கப்பட்டவை | |

6-469

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.